1990 ஏப்ரல் 2]

கூட்டுறவுக் கடன் வசூலை நிறுத்தி வைத்தல்.

*1531 திரு. ஏ. ஜி. சம்பத்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடுமையான வறட்சி நிலவுவதால் கூட்டுறவுக்கடன் வசூலை ஓராண்டுகாலம் நிறுத்தி வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம் முகையூர் தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளில் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அரசால் அறிவிப்பு செய்யப்படாத நிலையிலும், வருவாய்த் துறையினால் அப்பகுதியில் விளைச்சல் 37 பைசா அதற்குக் குறைவு என அன்னாவாரி சான்று வழங்கப்படாத நிலையிலும், நிலவரி வஜா செய்யப்படாத நிலையிலும் கூட்டுறவு கடன் வசூலை ஓராண்டு காலம் நிறுத்தி வைக்கும் நிலை எழவில்லை.

நிரந்தரப் பயணத் திட்டம்.

*3330பி திரு. ந. சௌந்திரபாண்டியன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

உலக வங்கி நிபுணர்களின் ஆலோசனைப்படி நடைபெறும் பயிற்சி பார்வையிடல் திட்டத்தில் விவசாய விரிவாக்க அலுவலர் களின் நிரந்தரப் பயணத் திட்டம் தொடர்ந்து கடைபிடிக்கப் படுமா அல்லது ஊராட்சி ஒன்றிய மேற்பார்வைக்கு கொண்டுவரப் படுவதால் அந்த முறையில் மாற்றம் ஏதேனும் செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

உலக வங்கி நிபுணர்களின் ஆலோசனைப்படி நடைபெறும் பயிற்சி பார்வையிடல் திட்டத்தில் வேளாண்மை விரிவாக்க அலுவலர்களின் நிரந்தரப் பயணத் திட்டம் தொடர்ந்து கடை பிடிக்கப்படுகிறது. அவர்கள் ஊராட்சி ஒன்றிய மேற்பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதால், இந்த முறையில் மாற்றம் ஏதும் இல்லை.